புதுகை
வரலாறு
நாளிதழ்

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில், தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது



பெருமாள்பட்டு, மார்ச், 3,

திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில், தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சென்னை உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் இருந்து ஏராளமான மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் கல்லூரியின் பிரதான அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்த கருத்தரங்கம் Techxaura-2K26, Sparkzz-2K26, Attune-2K26, Mechatron-2K26 எனும் நான்கு முக்கிய தொழில்நுட்ப நிகழ்வுகளை உள்ளடக்கியதாக நடைபெற்றது. CSE, AI & DS, AI & ML, Cyber Security , CSBS, ECE, EEE, இயந்திர பொறியியல் உள்ளிட்ட பல துறைகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றன. மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல், புதுமைத் திறனை ஊக்குவித்தல் மற்றும் கல்லூரிகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவை இந்நிகழ்வின் நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சியின் தொடக்க விழா காலை 10.00 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி, குத்துவிளக்கு ஏற்றுதல் மற்றும் கருத்தரங்க டீசர் வெளியீடு ஆகியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. தலைமை விருந்தினராக பிரேம் ஆனந்த் - Director Xtractul கலந்து கொண்டு, உருவெடுத்து வரும் தொழில் நுட்பங்கள், டிஜிட்டல் மாற்றம், புதுமை மற்றும் தொழில் தயார்நிலை குறித்து மாணவர்களுக்கு உரையாற்றினார். டாக்டர் ஆர். நாராயணசாமி தலைமை உரை வழங்கினார். முதல்வர் டாக்டர் பி.ஆர். ரமேஷ் பாபு சிறப்புரை வழங்கி, தொழில்நுட்ப கருத்தரங்கங்கள் மாணவர்களின் நடைமுறை அறிவு, தலைமையியல் திறன் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இறுதியாண்டு மாணவர் பிரதிநிதிகள் தங்களது துறைகளின் நிகழ்வுகளை அறிமுகப்படுத்தினர். தமிழ்நாடு முழுவதும் உள்ள பல பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் இருந்து 600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

மொத்த கருத்தரங்க பொறுப்பாளராக கணினி அறிவியல் துறை தலைவர் டாக்டர் பி.மகேஷ் செயல்பட்டார். ஒருங்கிணைப்பாளராக எஸ்.பிரவீனா சிறப்பாக நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்